## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் 60 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 6 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள்!

# 4500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் சேமிப்புக் கிடங்குகள் கட்டுமானப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

*சென்னை, மார்ச் 7 -*

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் ரூ.78.76 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 60 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய 6 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள், ரூ.9.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 4500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 வட்ட செயல்முறை கூடுதல் சேமிப்பு கிடங்குகள் ஆக மொத்தம் ரூ.88.06 கோடி மதிப்பீட்டிலான கட்டுமான பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 78 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 60,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய 6 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் மற்றும் பொதுவிநியோகத் திட்டத்தின் பயன்பாட்டிற்கான சேமிப்பு கிடங்கு கொள்ளளவினை மேம்படுத்தும் விதமாக 9 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 4500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 வட்ட செயல்முறை கூடுதல் சேமிப்பு கிடங்குகள் ஆக மொத்தம் ரூ.88.06 கோடி மதிப்பீட்டிலான கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவு தானியங்களைச் சேமித்து வைத்திடும் நோக்குடன் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை நவீன முறையில் சேமித்து வைத்திடவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

விவசாயிகளின் கடின உழைப்பின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, கொள்முதல் செய்யப்படும் நெல்லில் "ஒரு நெல்மணிக்கூட வீணாகக்கூடாது" என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினை செயல் வடிவமாக்கும் வகையில் நவீன நெல் சேமிப்பு கிடங்குகள் கட்டப்பட்டு வருகிறது.

அதன்படி, திருவாரூர் மாவட்டத்தில், நன்னிலம் வட்டம், சிறுபுலியூர் கிராமத்தில் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 18 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு, நீடாமங்கலம் வட்டம், கமுககுடி கிராமத்தில் 11 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 9 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு, மன்னார்குடி வட்டம், செருமங்கலம் கிராமத்தில் 9 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு; வலங்கைமான் வட்டம், திருவோணமங்கலம் கிராமத்தில் 8 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு, கடலூர் மாவட்டத்தில், காட்டுமன்னார்கோவில் வட்டம், வானமாதேவி கிராமத்தில் 9 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு; செங்கல்பட்டு மாவட்டத்தில், மதுராந்தகம் வட்டம், சிலாவட்டம் கிராமத்தில் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு;

என மொத்தம் 78 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 60 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய 6 நவீன நெல் சேமிப்பு வளாகங்களின் கட்டுமான பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பொதுவிநியோகத் திட்டத்தின் பயன்பாட்டிற்கான சேமிப்பு கிடங்கு கொள்ளளவினை மேம்படுத்தும் விதமாக, அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், தேலூர் கிராமத்தில் 5 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

3000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் சேமிப்பு கிடங்கு. விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், தமிழ்பாடி கிராமத்தில்

3 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் சேமிப்பு கிடங்கு;

என மொத்தம் 9 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 4500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 வட்ட செயல்முறை கூடுதல் சேமிப்பு கிடங்குகள் கட்டுமான பணிகளுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில்,உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி. ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் ஆ. அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை – மதுரை – கோவை உள்ளிட்ட

# 23 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள உழைப்பாளர் நலக் கூடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

*சென்னை, மார்ச் 7 -*

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் 9 கோடியே 31 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டுமானத் தொழிலாளர்களுக்காக சென்னை, மதுரை, கோயம்புத்தூர் உட்பட 23 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள உழைப்பாளர் நலக்கூடங்கள், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் காஞ்சிபுரம் மாவட்டம் எழிச்சூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் தையூரில் உள்ள தங்குமிடங்களில் 66 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள முதியோர் இல்லங்கள், 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள செய்யாறு அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கான புதிய கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 27 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 3 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு அரசால் கட்டுமானத் தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் காக்க தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் மூலமாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம், விபத்து ஊனம், இயற்கை மரணம், தனிநபர் விபத்து மரணம், பணியிடத்தில் விபத்து மரணம், வீட்டு வசதி நலத் திட்ட உதவித் தொகை போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற இந்த ஐந்து ஆண்டுகளில், 37.75 இலட்சம் பதிவு பெற்ற அமைப்புசாரா மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 3,317.16 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### உழைப்பாளர் நலக்கூடங்கள்
### தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின்

202526ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாக, கட்டுமானத் தொழிலாளர்கள் அவர்களது அன்றாட பணிகள் தொடர்பாக அதிகளவில் காலையில் கூடி காத்திருக்கும் இடங்களில் அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் குடிநீர் மற்றும் இதர அடிப்படை வசதிகளுடன் கூடிய 50 உழைப்பாளர் நலக்கூடங்கள் 20.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, முதற்கட்டமாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் சென்னை பெரியார் நகர் மற்றும் சைதாப்பேட்டை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி பொன்நகர் மற்றும் மன்னார்புரம், திருநெல்வேலி, ஈரோடு, திருப்பூர், செங்கல்பட்டு மதுராந்தகம் மற்றும் கூடுவாஞ்சேரி, நாமக்கல், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திண்டுக்கல், தென்காசி, திருவண்ணாமலை, சேலம், திருவாரூர், தருமபுரி, கரூர், கடலூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 23 இடங்களில் 9 கோடியே 31 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டுமானத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள உழைப்பாளர் நலக்கூடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### முதியோர் இல்லங்கள்

கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய உறுப்பினர்களாக இருந்து

60 வயது பூர்த்தியடைந்து, குடும்பத்தினரின் கவனிப்பும், பராமரிப்பும் இல்லாத கட்டுமானத் தொழிலாளர்கள் தலா 50 நபர்கள் தங்கும் வகையில் உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் காஞ்சிபுரம் மாவட்டம் எழிச்சூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் தையூரில் உள்ள தங்குமிடங்களில் அமைக்கப்பட்டுள்ள 2 முதியோர் இல்லங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்

கட்டி முடிக்கப்பட்ட புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடத்தை திறந்து வைத்து, புதிதாக கட்டப்படவுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

செய்யாறு அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலைய புதிய கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், திருவாரூர் மாவட்டம் வண்டாம்பாலையில் 9 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டம் ஏரலில் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறையில் 9 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், என மொத்தம் 27 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மூன்று புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வி.கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ. வீரராகவராவ், தொழிலாளர் துறை ஆணையர் சி.அ.ராமன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் டாக்டர் சி.பழனி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மீன்வளம் – மீனவர் நலத்துறை சார்பில் ரூ.100.84 கோடி மதிப்பில்

# 8 முடிவுற்ற பணிகள் - ரூ.665.53 கோடி மதிப்பில் 13 புதிய திட்டப் பணிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினர்!

*சென்னை, மார்ச் 7 -*

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.100.84 கோடி செலவில்**

**8 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.665.53 கோடி செலவில் 13 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 100 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் பல்நோக்கு கடற்பாசி உற்பத்தி பூங்கா, மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகம், மீன் இறங்குதளம், புதிதாக அமைக்கப்பட்டுள்ள வண்ண மீன் சில்லரை விற்பனையகம், ஒருங்கிணைந்த பயிற்சி மையம் மற்றும் காலநிலைக்கு ஏற்றவாறு வளப்படுத்தப்பட்டுள்ள மூன்று கடலோர மீனவ கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் என 8 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார். மேலும், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, செங்கல்பட்டு, தஞ்சாவூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் 665 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 13 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மீன்வளத்தை பாதுகாத்தல், நிலை க்கத்தக்க மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல், மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும் மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீன்பிடி தடைகாலங்களில் மீனவர்களுக்கு நிதியுதவி, மீன்பிடி படகுகளுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல், பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல், புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடவும், சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

### முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், வளமாவூரில் உள்ள 54 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பல்நோக்கு கடற்பாசி உற்பத்தி பூங்கா, மயிலாடுதுறை மாவட்டம், பழையார் மீனவ கிராமத்தில் 26 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகம், புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மீனவ கிராமத்தில் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள மீன் இறங்குதளம், திருநெல்வேலி மாவட்டத்தில் 5 கோடி ரூபாய் செலவில் நிறுவ ப்பட்டுள்ள பொது வண்ணமீன் காட்சியகம் மற்றும் வண்ணமீன் சில்லரை விற்பனையகம், கீழ் தாமிரபரணி உபவடி நிலப்பகுதியில் 1 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பயிற்சி மையம் மற்றும் மீன் பண்ணை;

காலநிலைக்கு ஏற்றவாறு மீனவ கிராமங்களை வளப்படுத்தும் வகையில், கடலூர் மாவட்டம் சி. புதுப்பேட்டையில் செயற்கை பவளப்பாறை மற்றும் மீன் உலர்தளம், செங்கல்பட்டு மாவட்டம் பரமன்கேணியில் வலைபின்னும் கூடம் மற்றும் மீன் ஏலக்கூடம், திருவள்ளூர் மாவட்டம் பசியவரத்தில் கட்டுபாட்டு அறையுடன் கூடிய பயிற்சி மையம் ஆகியவை தலா 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் மூன்று மீனவ கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்;

என மொத்தம் 100 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில்

8 முடிவுற்ற பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தை 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யும் பணி, தருவைக்குளம் மீனவ கிராமத்தில் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள புதிய மீன்பிடித் துறைமுகம், கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் மீன்பிடி துறைமுகத்தை 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யும் பணி, வாணியக்குடி மீனவ கிராமத்தில் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள புதிய மீன்பிடித் துறைமுகம், திருநெல்வேலி மாவட்டம் பெருமணல் கிராமத்தில் 19 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளைவை நீட்டிக்கும் பணி, செங்கல்பட்டு மாவட்டம் நெம்மேலி குப்பத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மீன் இறங்குதளம் அமைக்கும் பணி;

தஞ்சாவூர் மாவட்டத்தில் 7 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சம்பைப்பட்டிணம், காரங்குடா, பிள்ளையார் திடல், அடைக்கந்தேவன், கொள்ளுக்காடு, செந்தலைவாயல், அன்னன் நகர், புதுத்தெரு, மந்திரிப்பட்டினம், சோமநாதபட்டினம், கழுமன்குடா, வல்லவன்பட்டினம், கணேசபுரம், செம்பியன்மகாதேவி, மல்லிப்பட்டினம், மனோரா மற்றும் காந்தி நகர் ஆகிய மீனவ கிராமங்களில் வடிகால் கால்வாய்கள் மற்றும் முகத்துவாரத்தில் தூர்வாரும் பணி;

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் மீன்பிடி துறைமுகத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி, சின்னாங்குடி மீன் இறங்குதளத்தை

12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி, வெள்ளக்கோயில் மற்றும் தாழம்பேட்டை மீனவ கிராமங்களில் தலா 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடற்கரையோர கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணி, தூத்துக்குடி மாவட்டம் வேம்பார் மீனவ கிராமத்தில் தற்காலிகமாக வேம்பார் மீன் இறங்குதளத்தை

11 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணி;

என மொத்தம் 665 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 13 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

### தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 25.02.2026 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மீனவர்களின் நலன் காக்கும் வகையில் பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

அதன்படி, தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகளான கல்வி, திருமணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை களை உயர்த்தியும், கடலில் மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவர் குடும்பத்தின் துயர நிலையினை கருத்திற்கொண்டு, காப்பீடு மற்றும் நிவாரணத் தொகைகள் கிடைக்கும் வரை அவரது வாரிசுதாரருக்கு, தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் மூலம் மாதம் ரூ.2,000/ உதவித் தொகை, என 4 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி

பி. கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீனவர் நலவாரிய தலைவர் முனைவர் அ.ஜோசப் ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் முனைவர் கே.வி.முரளிதரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி கிருஷ்ணா மஹாலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் பயனாளிகளுக்கு வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆய தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சி.சரஸ்வதி, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தை கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். இதில் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், (BLA 2) பாக நிலை முகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.